## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜனவரி மாத சாதாரணக்கூட்டம் 31.01.2020-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது .

தனி அலுவலர் / ஆணையாளர்

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 03.01.2020 ஆம் தேதிய அறிக்கையின் படி, குளச்சல் நகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைப்பதற்கு கீழ்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| 14th CFC grant - Two installments 2019-20 | Estimated Cost Restoration of Roads | | | Total Estimated Cost | 14th CFC Grant - Two installments 2019-20 50 % |
|---|---|---|---|---|---|
| | water Supply | UGSS | Natural Calamities | | |
| | | | | | (Rs.in lakh) |
| 154.54 | 0 | 0 | 59.4 | 59.4 | 77.27 |

மேற்காணும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ-இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.4-ல் குழந்தையேசு காலனி, கே.எஸ்.எஸ்.எஸ் காலனி மற்றும் காரிதாஸ் காலனி ஆகியவற்றில் பேவர் தளம் அமைத்தல் | 22.40 |
| 2. | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.4-ல் செட்டியத்தெரு மற்றும் குறுக்கு தெருவில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 8.37 |
| 3 | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.17,20 மற்றும் 21-ல் மார்க்கெட் பின்புற சாலை, இலப்பவிளை பள்ளிக்கூடம் சாலை மற்றும் பண்டகசாலைபுரம் சாலை ஆகியவற்றில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 16.80 |
| 4 | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.18-ல் வாய்க்கால் தெருவில் சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல். | 19.60 |
| 5 | குளச்சல் நகராட்சி - வார்டு எண்.1-ல் வடக்கு கள்ளியடைப்பு பகுதியில் பேவர் இயந்திரத்தை பயன்படுத்தி தார் சாலை அமைத்தல் | 10.10 |
| | **மொத்தம்** | **77.27** |

மேற்காணும் பணிகளை திட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு, நிர்வாக அனுமதி வழங்க வேண்டி மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1430/2019/இ1

**தீர்மானம் எண்.2189 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையம் கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள், நவீனமீன்சந்தை கடைகள் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள் ஆகியவற்றிற்கு 02.01.2020-ல் பொது ஏலம் நடைபெற்றது. கடையின் ஏலவிபரம் பின்வருமாறு,

**<u>கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்</u>**.

| **வ.எண்.** | **கடை எண்.** | **பெயர்** | **கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1-க்கு)** |
|---|---|---|---|
| 1 | தரை தளம் 12 | முகம்மது முசேர் | 5500/- |

மேலும் காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்,17,18,22,23,24,36,37,39, கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 38,39,40,57,58,59,நவீன மீன்சந்தை தரைதளம் கடை எண்.3,4,7 முதல் தளம் கடை எண்.1 மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள்.25,32 ஆகிய கடைகளுக்கு முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் மேற்படி கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது

ந.க.எண்.1634/2013/அ3.

**தீர்மானம் எண்.2190 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2019-20-ன் கீழ், ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில், குளச்சல் அக்கரைப் பள்ளி சாலையில் வண்ண கற்கள் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில், நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/2209/2019 நாள் 27.11.2019-ன் படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1090/2019/இ1

**தீர்மானம் எண்.2191 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின் விளக்கு, சிறிய கோபுர மின் விளக்கு மற்றும் சூரிய ஒளியில் இயங்கும் சிறிய கோபுர மின் விளக்கு ஆகியவற்றை பராமரிப்பதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால், மேற்படி விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு, 2019-20 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,25,000/-க்கும், மேற்படி பணியின் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.540/2019/இ2.

**தீர்மானம் எண்.2192 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்டதில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் பெயரில் உள்ள வைப்புத் தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | இருப்பில் உள்ள வைப்புத் தொகை |
|---|---|---|
| 1. | K.K.INDUSTRIES | ரூ.2000/- |
| 2. | JES ELECTRICALS | ரூ.30400/- |
| 3. | KRYSTAL MOTORS(P) LTD | ரூ.64150/- |
| 4. | S.JEYAPRAKASH | ரூ.60000/- |
| 5. | T.R.TRADERS | ரூ.5000/- |

ந.க.எண்.783/2019/இ1.

**தீர்மானம் எண்.2193 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில், 14-வது மத்திய நிதிக்குழு (14th CFC Grant) நிதியின் கீழ், மேற்கொள்ளப்படும் ரூ.77.27 இலட்சம் மதிப்பீட்டிலான 5 எண்ணம் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தினமலர் நாளிதழின் 10.01.2020 ஆம் தேதிய நாகர்கோவில் பதிப்பில் வெளியிட்ட வகையில், அதற்கான பட்டியல் தொகை ரூ.2783/- ஐ வழங்க கேட்டு, M/s.Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.AAA/0621/19-20 நாள் 14.01.2020 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை தற்போது நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், திட்ட நிதி பெறப்பட்ட பின்னர் மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதிக்கு மாற்றம் செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1430/2019/இ1

**தீர்மானம் எண்.2194 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் 2019-2020 ஆம் ஆண்டிற்கு திரு.P.கென்னடி என்பவர் ரூ.72040/-க்கு குத்தகைக்கு எடுத்துள்ளார். தற்போது குத்தகை காலம் 31.03.2020 டன் ஓர் ஆண்டு முடிவடைவதால் மேலும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து (72040+3602) ரூ.75642/- மற்றும் சேவைவரி ரூ.13616/- சேர்த்து மொத்தம் ரூ.89258/-க்கு மேற்படி நபருக்கு பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழங்குவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3.

**தீர்மானம் எண்.2195 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு திரு.P.கென்னடி என்பவர் ரூ.60,000/- (ஜி.எஸ்.டி உட்பட) குத்தகைக்கு எடுத்துள்ளார். தற்போது கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2020 டன் ஓர் ஆண்டு முடிவடைவதால் மேலும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து (60000+3000 ஜி.எஸ்.டி உட்பட) ரூ.63000/- க்கு மேற்படி நபருக்கு கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் வழங்குவதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3.

**தீர்மானம் எண்.2196 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு.P.கென்னடி என்பவர் 2019-2020 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு எடுத்துள்ளார். தற்போது தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2020 டன் இரண்டு ஆண்டுகள் முடிவடைவதால் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து (535500+26775) ரூ.562275/- ஜி.எஸ்.டி 18% வீதம் ரூ.1,02,210/- தொழில் வரி அரையாண்டிற்கு ரூ.1250/- வீதம் ஓர் ஆண்டிற்கு ரூ.2500/- மற்றும் வருமானவரி 1% வீதம் ரூ.5623/- மொத்தம் சேர்த்து ரூ.6,71,608/- க்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு மேற்படி நபருக்கு தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழங்குவதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3.

**தீர்மானம் எண்.2197 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாசிலை அருகில் உள்ள கட்டணம் கழிப்பிடம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு திரு.ஐயப்பன் என்பவர் ரூ.8400/-க்கு குத்தகைக்கு எடுத்துள்ளார். தற்போது கட்டணம் கழிப்பிடம் குத்தகை காலம் 31.03.2020 டன் இரண்டு ஆண்டுகள் முடிவடைவதால் மேலும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து (8400+420) ரூ.8820/- மற்றும் சேவை வரி ரூ.1588/- சேர்த்து மொத்தம் ரூ.10408/-க்கு மேற்படி நபருக்கு கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் வழங்குவதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3.

**தீர்மானம் எண்.2198 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530 -ல் வாகனத்தின் முன்புறம், பின்புறம் மற்றும் அடி பகுதிகள் துரு பிடித்து உள்ளதாலும், வானத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், வாகனத்தை பரிசோதனை செய்யப்பட்டதில், கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

1. டிங்கர் ஒர்க்ஸ் மற்றும் பிரேமர் டச்சப் செய்தல்
2. வாட்டர் சர்வீஸ்
3. பெயிண்டிங் ஒர்க்ஸ்
4. எலக்டிரிக்கல் செக்கப் செய்து தேவையான பாகங்கள் மாற்றுதல்.
5. ஜாயிண்ட் ஸ்டார்,யோக், டீக் மாற்றுதல்,
6. பம்பர் கழற்றி சரி செய்தல் (ஸ்பீல் பிளேட்டிங் செய்தல்)

மேற்காணும் பழுதுகளை சரி செய்வதற்காக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Mathava Motors, Vellamadam நிறுவனம் அரசு துறை வாகனங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக அரசு அங்கீகாரம், இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமப்புத் துறை சென்னை கடிதம் ந.க.எண்.ஆ4/2163/2019-2 Major பழுது 2019-2021 நாள் 16.10.2019-ன் படி பெற்றுள்ளதால், மேற்படி நிறுவனம் மூலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினம் ரூ.48,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5030/2010/இ1.

**தீர்மானம் எண்.2199 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் வார்டு எண்.7-ல் துறைமுக பாலம் அருகில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக கட்டப்பட்டுள்ளது. கடலின் இயற்கையை கண்டு கழிக்க அதிக மக்கள் வந்து செல்வதால் கழிப்பிடத்தை கட்டணம் கழிப்பிடமாக மாற்றம் செய்வதற்கு ஏதுவாக முன்வைப்புத் தொகையாக ரூ.1000/- என நிர்ணயம் செய்ய மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.06/2020/அ3.

**தீர்மானம் எண்.2200 அனுமதிக்கப்பட்டது**